குப்பம் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை : N. சத்தியராஜ்

கடித எண். /2024 நாள்: 26-2-.2024

பொருள் : மனைப்பிரிவு காணை ஊராட்சி ஒன்றியம், குப்பம் ஊராட்சி (மு) கிராமம் ச.எண். 212/1B, 2, 3, 4A, 4B, 6, 7, 213/1, 6A ல் அமைந்துள்ள 6.77 ஏக்கர் 27,400 ச.மீ பரப்பளவு கொண்ட மனைப்பிரிவுக்கான இறுதி ஒப்புதல் வழங்கி உத்திரவிடுதல் – சார்பு.

பார்வை : 1. அரசாணை எண்.79 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை UD(3) நாள் : 23.09.2020.

2. நகர் ஊரமைப்பு இயக்குநர் விழுப்புரம் மாவட்டம் அவர்களின் ந.க.எண். 82MEPUGC/2024/TCP நாள் : 06.02.2024

3. குப்பம் ஊராட்சி தீர்மான எண்.47/2024 நாள்: 26.02.2024

4. தான பத்திர ஆவண எண். 386/2024 நாள்: 29.11.2024

5. இணைய தள வாயிலான சீட்டு நாள்: 07.03.2024

உத்திரவு

காணை ஊராட்சி ஒன்றியம், குப்பம் ஊராட்சி (மு) கிராம ச.எண். 212/1B, 2, 3, 4A, 4B, 6, 7, 213/1, 6A ல் 6.77 ஏக்கர் (மு) 27,400 ச.மீ பரப்பளவு கொண்ட இடத்தினை மனைப்பிரிவாக வரன்முறைப்படுத்திட பார்வை 1ல் காணும் அரசாணையில் தெரிவித்துள்ள வழிகாட்டி நெறிமுறைகளின் படியும் பார்வை (2)ல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் மாவட்டம் அவர்களின் நடவடிக்கையின் வாயிலாக ஒப்புதல் கடிதம் வரப்பெற்றுள்ளது.

பார்வை 3ல் (மு) (4)-ல் காணும் ஊராட்சியின் தீர்மான மற்றும் தானப்பத்திரம் அமைந்துள்ள இடத்தினை ஸ்தல ஆய்வு செய்து மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்த அனுமதி வழங்குமாறு தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

பார்வை (5)ல் காணும் விவரப்படி புன்செய் வகைபாட்டில் இருந்த மனையாக மாற்ற அனுமதி கோரும் இடத்தின் சந்தை மதிப்பில் 3% தொகை நில பயன்மாற்ற கட்டணமாக உரிய அரசு தலைப்பில் செலுத்தி அதற்குண்டான கட்டணம் ரூ.60,000/- மற்றும் கூராய்வு கட்டணம் ரூ.1,80,000/- 180x1000 இந்தியன் வங்கி, குப்பம் கிளை வாயிலாக செலுத்தி அதற்குண்டான ஆவணங்கள் பின்வரும் விவரப்படி அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அரசுத்தலைப்பு -021760800AS22709

வ.எண்.	பரப்பளவு	சந்தை மதிப்பு 1ஏக்கர் 55 லட்சம்	3சதவீத நிலமாற்று நில மதிப்பு கட்டணம்
1.	ஏக்கர் 6.77 ஏக்கர் 27,400 சதுரமீட்டர்	6.77 ஏக்கருக்கு மொத்த மதிப்பு ரூ.	ரூ.

நிபந்தனைகள் :

1. நில உரிமம் பத்திரம் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் மனைப்பிரிவுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆவணங்கள் தவறானவை என அறியப்பட்டால் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட அனுமதி ரத்து செய்யப்படும்.

2. மனைப்பிரிவில் புதிய கட்டிடடங்கள் அமைக்கும் போது ஒவ்வொரு கட்டிடத்துக்கு தனித்தனியாக முன் அனுமதி பெறவேண்டும்.

3. மனைப்பிரிவுக்கான இடம் அரசு நிலமாகவோ அல்லது நீர் நிலைக்கட்குண்டான இடமாகவோ இருப்பது தெரியவந்தால் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி மனைப்பிரிவுக்கான அனுமதி ரத்த செய்யப்படும்.

4. மேற்படி மனைப்பிரிவுக்கு குப்பம் ஊராட்சியில் அனுமதி வழங்கப்பட்டிருந்தாலும், இட உரிமை தொடர்பாக ஏதேனும் வில்லங்கம் இருப்பின் பத்திர பதிவுத்துறை பரிசீலனை செய்து முடிவு எடுக்க வேண்டும்.

மேற்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் வட்டம், குப்பம் ஊராட்சி , குப்பம் கிராமம் சர்வே எண். 212/1B, 2, 3, 4A, 4B, 6, 7, 213/1, 6A அமைந்துள்ள 6.77 ஏக்கர் (ம) 27,400 சதுரமீட்டர் பரப்பளவில் அமைந்துள்ள 180 மனைகளுக்கு மட்டும் இறுதி ஒப்புதல் அளித்து உத்தரவிடலாகிறது.

இடம் : குப்பம்
நாள்:26.02.2024

தலைவர்,
ஊராட்சி மன்ற தலைவர்
குப்பம்.

பெறுதல்:
திரு . P.செல்வராஜ்
பாஸ்கர், (ம) செல்வி
நெ.1/10, மெயின் ரோடு,
காணை , விழுப்புரம்.

1. நகல் : வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்) காணை அவர்களுக்குத் தகவலுக்காகப் பணிந்தனுப்பப்படுகிறது

2. நகல் : உதவி இயக்குநர் (நகர் ஊரமைப்பு) விழுப்புரம்அவர்களுக்குத் தகவலுக்காகப் பணிந்தனுப்பப்படுகிறது.

3. நகல் : சார்பதிவாளர் அலுவலகம்-2, விழுப்புரம் அவர்களுக்குத் தகவலுக்காகப் பணிந்தனுப்பப்படுகிறது.

4. நகல் : வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், விழுப்புரம்
அவர்களுக்குத் தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.